இருக்கின்ற வருவாய் கிராமங்கள் அன்று சேர்க்கப்படவில்லை. இப்பொழுது 12 வருவாய் கிராமங்கள் தூத்துக்குடி மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், வாக்களிக்கின்ற வாக்காளர்கள் சங்கரன்கோயில் தொகுதியில், நெல்லை மாவட்டத்தில் வாக்களிக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அவற்றை அரசு மறுபரிசீலனை செய்து, தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தூத்துக்குடி மாவட்டத்தோடு கோவில்பட்டி தொகுதியில் அந்த 12 வருவாய் கிராமங்கள் சேர்க்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் விடையளிப்பது முறையாகாது. ஏனென்றால், இந்தப் பிரச்சினை, தேர்தல் ஆணையம் நேரடியாகப் பரிசீலித்திட வேண்டியதாகும். எந்த ஒரு தொகுதியிலும் இடம்பெறாமல் எந்த கிராமமும் இருக்க முடியாது. ஏதாவது ஒரு தொகுதியிலே அது இடம் பெற்றே தீரவேண்டும். அப்படி இடம் பெறாமல் இருக்குமானால் அந்தப் பிரச்சினையைத் தேர்தலுக்காக தொகுதிகள் பிரித்து அறிவித்ததற்குப் பின்னர், வாக்குச் சாவடிகளை மாவட்ட ஆட்சித் தலைவரோ, தேர்தலுக்காக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற அதிகாரிகளோ அதை ஆய்வு செய்கிறபொழுது, அந்தக் காலகட்டத்தில் கிராமங்கள் ஏதேனும் விடுபட்டு இருக்குமானால், தேர்தல் ஆணையம் உடனடியாக அதற்குரிய பரிகாரத்தைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 202, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

202—

விதை சுத்திகரிப்பு நிலையம்

***43012—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் விதை சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2008 மே 6]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிபட்டு தொகுதியில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தொகுதி என்பது நெசவாளர்கள் சார்ந்த பகுதியாக இருந்தாலும்கூட அங்கே விவசாயிகளும் முக்கியப் பங்கு வகிக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே விதை சுத்திகரிப்பு நிலையம் தேவை என்கின்ற அடிப்படையிலே, அந்தப் பகுதியில் அதை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நான் கேட்கின்ற கேள்விக்கு உண்டு என்று பதில் சொல்ல வேண்டும் என்று முதலிலே என்னுடைய கோரிக்கையை முன்வைத்து, என்னுடைய தொகுதியில் இருக்கிற திருக்கழுக்குன்றம் வட்டம், விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற வட்டமாகும். அங்கு எந்தத் தொழிற்சாலையும் இல்லை. அங்கு ஏராளமான விவசாயிகள் நாற்று விடுகின்ற சமயங்களிலே நெல் விதைகளை வைப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கிறார்கள். அதேபோன்று, விதை சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கூடுதலாகக் கட்டடம் இல்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற அந்த விதை

சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கூடுதலாக கட்டடமும், கூடுதலாக விதை சுத்திகரிப்பு இயந்திரமும் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பள்ளிப்பட்டு தொகுதியிலே புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது. அதற்குத்தான் என்னிடத்திலே விடை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் அல்லது கோரிக்கையை எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.*

திரு. அ. சௌந்திரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்காச்சோளம் வீரிய விதைகள், ஒரு கிலோ விதை 150 ரூபாய், 200 ரூபாய் என்கின்ற அளவிலே விற்கப்படுகின்றது. ஆனால், வீரிய பருத்தி விதை 450 கிராம் 1,500 ரூபாய் என்று விற்றதை 750 ரூபாய்க்கு விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, ஒரு கிலோ விதை பாக்கெட்டின் விலையை ரூ.750-க்குக் குறைத்த இந்த அரசு, மக்காச்சோளத்தின் விலையையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீரிய விதை அல்லது* B.T. *இரக விதைகளைப் பற்றிக் கேட்கின்றார். தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 203, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*